1968 மார்ச் 19]

திரு. பெ. மலேச்சாமி : தற்பொழுது மேலூர் வட்டத்தில் மூன்று ஒன்றியங்கள் இருக்கின்றன. அவற்றில் ஒரு ஒன்றியத்தில் பெரியாறு தண்ணீர் பயன்படுகிறது. மற்ற இரண்டு ஒன்றியங்களுக்கு அந்தத் தண்ணீர் முழுமையாகப் பயன்படாவிட்டாலும், ஆறு ஆயிரத்திலிருந்து எட்டு ஆயிரம் ஏக்கர் வரையில், புஞ்சை நிலம் நஞ்சை நிலமாகக்கூடிய வகையில் இந்தத் திட்டத்தையும் அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்பொழுது போடப்படுகின்ற எஸ்டிமேட்டில் கடாரிப்பட்டிப் பகுதியில் பெரியாறு இடம் பெறுகிறதா இல்லையா என்ற கேள்விக்கு இடம் இல்லாமல் இருக்கிறது. எஸ்டிமேட் வந்ததற்குப் பிறகுதான் விரிவாகக் கூற முடியும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி 252 பிறகு எடுத்துக் கொள்ளப்படும். நேற்று ஒத்திவைக்கப்பட்ட கேள்வி 243 இப்பொழுது எடுத்துக் கொள்ளப்படும்.

கசிவு நீர்க்குளங்கள்

* 243 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1962 முதல் 1966 வரை காடு மலையடிவாரங்களில் (Percolation tanks) நமது ராஜ்யத்தில் எத்தனை இடங்களில் கட்டப்பட்டுள்ளன, ஜில்லா வாரியாக ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : சபைமுன் ஓர் அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன் : காடு, மலையடிவாரங்களில் மழை காலங்களிலே மலைமேலே பொழியக்கூடிய தண்ணீர் பணியிலே இருக்கக் கூடிய வளத்தை எல்லாம் அடித்துக்கொண்டு போய்விடுகிறது. அதனால் விவசாயம் செய்யமுடியாத அளவுக்கு மகசூல் இல்லாத அளவுக்குப் போய் விடுகிறது என்ற காரணத்தினாலே இது போன்றவற்றைத் தடுப்பதற்காகச் சிறிய சிறிய குளங்களாக கட்டக்கூடிய அளவுக்கு நிலைமை உண்டாக்கப் பட்டிருக்கிறது. ஆகவே நமது ராஜ்யத்திலே வட ஆற்காடு மாவட்டம், சேலம் மாவட்டம், தர்மபுரி மாவட்டம் போன்ற பல இடங்களில் காடு, மலைகள் அதிகப்படியாக இருக்கின்ற பிரதேசங்கள் இருப்பதன் காரணமாக . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வியைப் போடுங்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : இதைச் சொல்லிவிட்டுத்தான் கேள்வி போடவேண்டும் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எவ்வளவு நேரம் ?

திரு. வி. கே. கோதண்டராமன் : திரு. விநாயகம் அவர்கள் எல்லாம் 10 நிமிடங்களுக்குச் சொல்கிறார்கள், பேசாமல் இருக்கிறார்கள். நான் விளக்கும் பொழுதுதான் கேள்வியாகப் போடுங்கள் என்று சொல்கிறார்கள் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒருவர்பற்றிச் சொல்லி, ஒருவர்பற்றிச் சொல்லாமல் இருப்பதில்லை, சீக்கிரமாகக் கேள்வியைப் போடுங்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : இதுபோன்ற செக் டாம்ஸ் கட்டுவதற்குச் சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

---

* 649—650-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற முக்கியத்துவத்தை உணர்ந்துதான் சாயில் கன்சர்வேஷன் திட்டத்தின்கீழே ஆராய்ச்சிகள்செய்து இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப் பட்டிருக்கின்றன. மலையையும் காட்டையும் சேர்ந்த பிரதேசங்களில்மட்டும் 7 திட்டங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. மேலும், கனம் உறுப்பினர் அவர்கள் கூறுவதைப்போல திருச்சி, கோயம்பத்தூர், தர்மபுரி மாவட்டங் களில் காடு, மலை இவையில்லாத மற்றப் பகுதிகளிலும் இது செய்யப்பட்டு வருகிறது.

திரு. டி. மார்டின் : சார், நெல்லை மாவட்டத்தில் என்னுடைய சாத்தான்குளம் தொகுதியில் ஒரு பரந்த காடு உண்டு. அங்கே திடீரென்று பெய்கின்ற மழையின் காரணமாகத் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடி, புத்தன் தருவை என்ற இடத்தில் விவசாய நிலங்களையெல்லாம் தண்ணீருக்குள் ஆழ்த்திவிடுகிறது. இதைப்பற்றி அரசுக்கு ஏதாவது செயற் குறிப்பு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : நெல்லை மாவட்டத்திலே 6 இடங்களிலே இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

திரு. கே. விநாயகம் : மேஜையின்மேல் வைக்கப்பட்டிருக்கிற அறிக்கையைப் பார்த்தால், 1962-லிருந்து 1966 வரையிலேதான் குறிப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. போன ஆண்டும் இந்த ஆண்டும் குறிப்பாக ஆந்திர மாநிலத்திலிருந்து நம்முடைய மாநிலத்தோடு சேர்க்கப்பட்ட திருத்தணித் தாலுகாவிலே இம்மாதிரி வேலைகள் செய்வதற்குக் குறிப்பு இருக்கிறதா ? இல்லையென்றால் அரசாங்கம் அதைக் கவனிக்குமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் உறுப்பினர் அவர்களுடைய திருத்தணிப் பகுதியிலே இந்தத் திட்டம் செய்யப்படவில்லை. தகுதியான இடம் இருக்குமானால் அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அவற்றைப் பரிசீலிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

முற்பகல் 9-30

திரு. மு. ச. சிவசாமி : சார், நெல்லை மாவட்டத்தில் கட்டப்பட இருக்கிற அந்த 6 இடங்கள் எவை எவை ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : திருநெல்வேலி மாவட்டத்தில் சங்கரன்கோவில் பகுதியில அரியநாயகிபுரம் பாகொலேஷன் பாண்ட்–3589. சின்னக்கோயிலன் குளம் பாகொலேஷன் பாண்ட்–2029. திருநெல்வேலி சப்-டிவிஷனில் சமூகரங்கபுரம் 6472, பொய்கை 8375, குறுகல்பட்டி 3699, நகரம் 4864.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, I wish to know from the Hon. Minister for Agriculture the number of percolation tanks proposed for the Hosur taluk in the Dharmapuri district?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : ஹோசூர் தாலூகாவில் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால் கிருஷ்ணகிரிப் பகுதியில்மட்டும் இரண்டு திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. தி. பொன்னுமலை : தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் மலையடிவாரங்களில் வரக்கூடிய தண்ணீரை ஆங்காங்கே சிறு சிறு குட்டைகளாகக் கட்டித் தேக்குவதற்காகப் பல முறை எடுத்துச் சொல்லியும், விவசாயக் கருத்தரங்கில் அதுபற்றிப் பல விளக்கங்கள் கொடுத்தும் இன்னும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதன்மீது நடவடிக்கை கள் எடுப்பதோடு, ஃபாரஸ்ட் பகுதியில் மலையடிவாரங்களில் விவசாயத்திற்குத் தகுதியான நிலங்கள் அதிகமாக இருக்கின்றன, அவற்றையும் விவசாயி களுக்குப் பட்டா வழங்கி அப்படிப்பட்ட நிலங்களை விவசாயத்துக்குத் தகுதியாக்கும் எண்ணம் அரசாங்கத்திற்குண்டா ?

1968 மார்ச் 19]

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அங்கத்தினரவர்களுடைய முன் பகுதி கேள்விக்குமட்டும் பதில் அளிக்க முடியும். அவர்கள் குறிப்பிடுகிற பகுதிகள் எந்தெந்தப் பகுதிகள் என்று விளக்கினால், அதைப் பரிசீலனைச் செய்யச் சொல்லலாம். பட்டா வழங்கும் பிரச்னை தனிப்பட்ட பிரச்னை.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், வட ஆற்காடு மாவட்டத்தில் பாலாறு பேஸின் ரூல்ஸ் என்று சொல்லக்கூடிய மோசமான ஒரு சட்டம் அங்கிருக்கிற காரணத்தினால் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மோசமான சட்டம் என்று சொல்லக்கூடாது. பாலாறு பேஸின சட்டம் என்று சொல்லுங்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : அது விவசாயிகளைப் பாதிக்கக் கூடிய ஒரு சட்டமாக இருப்பதால், ஆந்திராவின் பார்டர்—எல்லையில் காட்டுப் பிரதேசத்தின் ஓரமாக இருக்கிற காரணத்தாலும், இந்தத் திட்டத்தின்கீழ் போதுமான அளவுக்குக் கவனம் செலுத்தித் தண்ணீர்த் தேக்கங்களை ஏற்படுத்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அந்தத் திட்டத்தினுடைய முக்கியத்துவத்தை அரசாங்கம் உணர்ந்திருக்கிறது. இப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பது, உறுப்பினர் அவர்களின் குடியாத்தம் பகுதியில்மட்டும் 7 திட்டங்கள் இருக்கின்றன. மேற்கொண்டு திட்டம் இருக்குமானால், எந்தெந்தப் பகுதியில் அந்தத் திட்டத்தை அமலாக்கலாம், எங்கு அதற்கு வாய்ப்பிருக்கிறது என்று அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் தண்ணீரைத் தேக்கவும், வண்டல் அடித்துக் கொண்டுபோகாமல், அரிப்பு ஏற்படாமல் தடுத்து நிறுத்தவும், ஏற்பாடு செய்ய முடியும். அப்படிக் குளங்கள் அமைத்து பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கிறோம். பஞ்சாயத்துக்கள் ஒழுங்கான முறையில் கண்காணித்து, ஓரங்களில் செடி, மரங்கள் வைத்து உற்பத்திசெய்து, அதைக் காப்பாற்றுவதன் மூலமாக ஊற்று சுரப்பதற்குக் கூட வாய்ப்பிருக்கிறது. இது நல்ல திட்டம் என்று உணர்ந்துதான் மேற்கொண்டிருக்கிறது. வேறு பகுதிகளில் சாத்தியக் கூறுகள் இருக்குமானால், அதைப்பற்றிக் கூறலாமே தவிர, பாலாறு பேஸின ரூலுக்கும் இதற்கும் முடிச்சுப் போடவேண்டியது இல்லை.

தஞ்சை மாவட்டத்திலுள்ள முறைப்படுத்தப்பட்ட சந்தைகள்

*253.—வினா திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில்; எத்தனை ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள் மூடப்பட்டன ?

(இ) அதற்கான காரணமென்ன ?

(உ) அதனால் எத்தனை பேர்கள் பாதிக்கப்பட்டார்கள் ?

(எ) இது விஷயமாக விவசாய அமைச்சருக்கு மனு ஏதேனும் வந்துள்ளதா ?

(ஐ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) முறைப்படுத்தப்பட்ட பதின்மூன்று சந்தைகள் செயல்படுவதை நிறுத்தின. இவற்றில் ஒன்று மீண்டும் துவக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றது.